**குவைத் நிதியளிக்கப்பட்ட பாலங்கள் புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாணச் செயற்திட்டம் - 2016**

குவைத் நிதியளிக்கப்பட்ட பாலங்கள் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்திற்கும் (கேஎவ்ஏஈடீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 1995 மார்ச் 27 இன் 466 ஆம் இலக்க மற்றும் 2001 செப்தம்பர் 03 இன் 627 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் உயர்கல்வி, துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சாகவிருந்த தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. விவசாய மற்றும் தொழிற்துறை பொருட்களின் போக்குவரத்துக் கிரயத்தினை குறைப்பதன் மூலம் இலங்கையின் தேசிய பொருளாதரத்திற்கு உதவுதல் மற்றும் நாட்டின் பிராந்தியங்கள் மற்றும் தலைநகர்களுக்கிடையிலான போக்குவரத்து நேரத்தினை குறைத்தல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். ஒடுங்கிய மற்றும் பலவீனமான 32 பாலங்களின் மாற்றுகை அல்லது புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் ஹட்டம்பஹன்னோருவ வீதியின் விரிவாக்களினூடாக வீதிப் பாதுகாப்பினை முன்னேற்றுதலும் கூட செயத்திட இலக்குகளாகக் காணப்பட்டன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 3,432 மில்லியனிற்கு சமமான குவைத் தினார் 10.12 மில்லியனானதுடன் அதில் ரூபா 1,728 மில்லியனிற்கு சமமான குவைத் தினார் 5.10 மில்லியன் அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்தினால் வழங்குவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 1995 மார்ச் 27 இல் ஆரம்பித்திருந்ததுடன் 33 மாதங்களுக்குள் 1997 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து, செயற்திட்டத்தின் காலப்பகுதி 2016 மார்ச் 24 வரை 10 சந்தர்ப்பங்களில் மற்றுமொரு 19 வருடங்களினால் நீடிப்புச்செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில்

செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| கேஎவ்ஏஈடி | 5.10 | 1,728 | 3.11 | 0.009 | 3.10 | 3.79 | 1,670 |
| ஜீஓஎஸ்எல் | 5.02 | 1,704 | 2.25 | - | 2.25 | - | 1,688 |
| | 10.12 | 3,432 | 5.36 | 0.009 | 5.35 | 3.79 | 3,358 |

**3.2 பௌதீக செயலாற்றல்**

கிடைக்கக்கூடிய தகவல்களின் பிரகாரம், ஹட்டம்ப - ஹன்னொருவ வீதியின் விரிவாக்கம் மற்றும் 32 ஒடுங்கிய மற்றும் பலவீனமான பாலங்களின் புனர்வாழ்வு, புனரமைப்பு அல்லது மாற்றிடுகை செயற்பாடுகள் 2015 திசெம்பர் 31 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காலி - தெனியாய – மாதம்பெ வீதியிலுள்ள 03 பாலங்களின் புனரமைப்பு வேலைகள் ரூபா 115.30 மில்லியனுக்குச் சமமான குவைத் தினார் 256,224 ஆன செலவழிக்கப்படாத கடன் மீதியொன்றினைப் பயன்படுத்துவதன் மூலம் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொள்வனவு செய்யப்பட்ட காணித்துண்டுகளின் இழப்பீடுகளை தீர்ப்பனவு செய்வதில் தாமதத்தின் காரணமாக செயற்திட்டத்தினால் 2016 திசெம்பர் 31 வரை ரூபா 69.23 மில்லியன் கூட்டுத்தொகையான வட்டி செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைவதற்கு நேரடியாக தொடர்புபட்டு காணப்பட்டிருக்காத போதிலும், செயற்திட்டத்தின் காலபகுதியின் போது திறப்பு விழாக்களின் நோக்கத்திற்கு செயற்திட்டத்தினால் ரூபா 5.90 மில்லியன் தொகையொன்று செலவழிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் மேற்குறித்த செலவீனத்திற்கான ஆதாரமான ஆவணங்கள் கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயற்திட்டத்தின் நடவடிக்கைகளினை முடிவுறுத்தல்**

2016 திசெம்பர் 31 இல் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும், அமுலாக்கல் முகவருக்கு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களினை மாற்றுவதற்கு மற்றும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளினை மூடுவதற்கு, செயற்திட்ட கண்காணிப்பு அலகிற்கு அறிவுறுத்துவதற்கு நிறைவேற்று முகவரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.